சுடர் 15 கதிர் 2

# மிட்ஸ் ஜக்கிய சுடர்

ஏப்ரல் - ஜூன் 2024

மும்மாத இதழ்

தனிச்சுற்றுக்கு மட்டும்

## முதல் ஹீரோ என் அப்பா



# MALANKARA CATHOLIC COLLEGE

Mariagiri, Kaliyakkavilai, Kanyakumari Dt, TamilNadu-629153
Cell : 04651 - 244156, 9442336243
Email : malankaracollege@gmail.com, web : www.malankara.edu.in

ACCREDITED BY NAAC WITH B+ IN 2004, ISO 9001 -2000 CERTIFIED
AFFILIATED TO MANONMANIAM SUNDARANAR UNIVERSITY, THIRUNELVELI
OWNED AND MANAGED BY THE DIOCESE OF MARTHANDAM ; ESTD 1998



**Most Rev.Dr.Vincent Mar Paulos**
Bishop, Diocese of Marthandam
Manager / Chairman



**Rev.Fr.Aruldas**
Correspondent / Secretary



**Rev.Fr.Vinu Immanuvel**
Bursar



**Dr.T.Peter Amaladhas**
Principal



**Rev.Sr.Serine D.M**
Superintendent



## UG Courses

- B.Sc. Biochemistry
- B.Sc. Biotechnology
- B.Sc. Microbiology
- B.Sc. Chemistry
- B.Sc. Mathematics
- B.Sc. Physics
- B.Sc. Geology
- B.Sc. Computer Science
- B.C.A
- B.Sc. Psychology
- B.B.A
- B.Com
- B.A. Economics
- B.A. English
- B.A. Journalism and Mass Communication

## PG Courses

- M.Sc. Biochemistry
- M.Sc. Biotechnology
- M.Sc. Microbiology
- M.Sc. Chemistry
- M.Sc. Mathematics
- M.Sc. Physics
- M.Sc. Geology
- M.Sc. Computer Science
- M.Com
- M.S.W
- M.A.English

## M.Phil

- Biotechnology
- Microbiology
- Physics
- English

## Ph.D

- Biotechnology
- Microbiology
- Mathematics
- Physics
- Computer Science
- Commerce

**Special Coaching Classes**
UPSC, KPSC, TNPSC, RRB & IBPS

**63 UNIVERSITY RANKS IN 2020 - 2021**

**College Bus and Hostel Facilities Available**

ஆதரவாளர்கள்

**மேதகு ஆயர் Dr. வின்சென்ட் மார் பவுலோஸ்**
தலைவர் - மிட்ஸ்

**அருட்தந்தை. முனைவர் ஜெறோம் C.**
இயக்குநர் - மிட்ஸ்

ஆசிரியர்

**திரு. M.G. ஜோசப் பேட்ரிக் ஆன்டனி,**
M.S.W., LL.B.,

ஆசிரியர் குழு

**செல்வன். ஷாபின் .S**

**திரு. ஷாஜன் ஜோசப்**

**திரு. சஜிகுமார் .M**

**திருமதி. வினிதா ராணி .T**

**திருமதி. விஜயா .M**

**திருமதி. சசிகலா .T**

**திருமதி. சுனி .V**

தொகுப்பாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்

**திருமதி. V. சுனி**

வெளியீடு

**மிட்ஸ்,**
இடைவிளாகம் - கழுவன்திட்டை
குழித்துறை - 629 163, குமரி மாவட்டம்.

Ph : 04651-263390, 295690
Email : mids.marthandam@gmail.com
Website : mids.org.in

அச்சிட்டவர்

**நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ்,**
நாகர்கோவில்

**தனிச்சுற்றுக்கு மட்டும்**


# உள்ளே ...


1. இயக்குநரிடமிருந்து 3
2. உலக உணவு பாதுகாப்பு நாள் 4
3. தியாகத்தின் உறைவிடம் தந்தையர் 7
4. மேற்கு தொடர்ச்சி மலைகளின் ஓலக்குரல் 8
5. அப்பா 10
6. செம்பருத்தி பூ ஜூஸ் 10
7. தந்தையர் தினம் 11
8. விடியல் 12
9. மிட்ஸ் நிறைவாழ்வு சங்கம் 13
10. மிட்ஸ் குடும்ப வளர்ச்சித் திட்டம் 14
11. தளிர்கள் உலகம் திட்டத்தின் கீழ் வழிகாட்டுதல் பயிற்சி 15
12. விருட்சம் 18
13. கோள்பிங் 18
14. மிட்ஸ் மரியன் இயக்கம் 18
15. Changing The Way We Care விண்ணைத் தொடு 19
16. விடுகதைகள் 19
17. MIDS Member Welfare Scheme (MMWS) 20
18. Cancer Day Fund Collection 21
19. குறுக்கெழுத்துப் போட்டி 25

# இயக்குநரிடமிருந்து ...



பாசமிகு மிட்ஸ் தோழர்களே வணக்கம்! சூழல் பாதுகாப்பு எங்கேயோ எப்போதோ பேரழிவுகளில் மட்டும் நமது உரையாடலானால் போதுமா? பேரழிவுகளாவது நம் மனச்சான்றை தட்டி எழுப்புமா? அமைதியான பேரழிவுகள் குறித்து நமக்கு போதுமான அறிவு இருக்கிறதா? நாம் வாழ நமக்கு ஓர் இல்லமே உள்ளதால் இதுகுறித்து நாம் அதீத அக்கறை கொள்ள வேண்டிய சூழலில் உள்ளோம். "காலநிலை மாற்றதால் மனிதர்கள் ஆபத்தில் உள்ளார்கள் என்பதல்ல; மாறாக, மனிதர்கள் ஆபத்தானவர்களாக இருக்கிறார்கள்; அதேவேளையில் ஆபத்தின் தீர்வுகளாகவும் இருக்கின்றார்கள்" என்கிறார், ஐநா பொதுச்செயலாளர் அந்தோனியே குற்றியரெஸ். மனிதர்களால் உருவாக்கப்பட்ட அழிவுகளை சீரமைவுச் செய்ய இயலும். உலகின் பல பகுதிகளிலும் சுற்றுச்சூழலை காக்க தனிமனிதராகவும், குழுக்களாகவும், அமைப்புகளாகவும் பல நல்மனிதர்கள் களமிறங்கிச் செயல்படுவது வணங்கத்தகுந்தது.

உலகளாவிய முறையில் சூழல் பாதுகாப்பு சார்ந்து ஐக்கியநாடுகள் அவை நம்மைப் போதுமான அளவு அறிவூட்டினாலும், நமக்கு உணர்வுப்பூர்வமான ஈடுபாடு வர, நாமே கள நிலவரங்களைப்பற்றித் தெரிந்து கொள்வதும், கூட்டாகச் செயல்படுவதும் மிக முக்கியமாகிறது.

"நம் நிலம்:நமது எதிர்காலம்" என்று செயல்பாட்டுச் சிந்தனையுடன் இவ்வாண்டைய சூழல்காப்பு விழிப்புணர்வை ஐக்கிய நாடுகள் அவையுடன் நாம் மேற்கொள்கிறோம்.

நமது வீடுகளையும், குடியிருப்புப் பகுதிகளையும் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படாவண்ணம் அமைப்பது, பொதுப் போக்குவரத்து வாகனங்களில் பயணித்தல், பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்தாமல் இருத்தல், நீரை அளவோடு செலவழித்தல், மின்சாரத்தை மிச்சப்படுத்துதல், பதப்படுத்தப்பட்ட, பிளாஸ்டிக் டப்பாக்களில் அடைத்துவைக்கப்பட்ட உணவுப்பொருட்களை தவிர்த்தல், நாம் வசிக்கும் பகுதிகளில் அருகிலேயே விளையும் தானியங்களையும், உணவுப் பொருட்களையும் வாங்குதல், உணவினை வீணாக்காதிருத்தல், வசதிக்கு ஏற்ப இயற்கை விவசாயத்தில் விளைந்த பொருட்களை வாங்குதல், இயற்கையை அழித்து, சுற்றுச்சூழலைக் கெடுத்து தயாரிக்கப்பட்ட பொருட்களையும், அவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் பொருட்களையும் வாங்காத ஒரு பொறுப்பான நுகர்வோராக இருத்தல், இளைய சமுதாயத்திற்கு புறவுலகை நேசிக்க கற்றுக் கொடுக்க இயற்கையான வாழிடங்களுக்கு அவர்களை அழைத்துச் சென்று, இயற்கையின் விந்தைகளை நேரில் காணும் அனுபவத்தை அளித்தல் என நமது அன்றாட நடவடிக்கைகளில் கொஞ்சம் கொஞ்சமாக முடிந்த வரையில் மாற்றத்தை கொண்டுவந்து, முன்னுதாரணமாகத் திகழ்வோம்.

இவையனைத்தையும் குழந்தைகள் சிறு வயதிலிருந்தே புரியவும், நீடித்த நிலைத் தன்மையுடன் கூடிய வளர்ச்சியை அவர்கள் உணரவைக்க வேண்டும். நிலைத்தன்மை என்பது எதிர்காலத்திற்கான வளங்களை சமரசம் செய்யாமல், நிகழ்காலத்தில் அவற்றின் இருப்பை அறிந்து, வளர்ச்சிக்கு மிக இன்றியமையான வற்றிற்கு மட்டும் இயற்கை வளங்கள் பயன்படுத்தப்படுவதை நாம் உறுதி செய்வோம். சூழல்தினம் மட்டுமல்லாது, நமது அன்றாட வாழ்வே நீடித்த நிலையான குறிக்கோளோடு இயங்க வாழ்த்துகிறோம்.

என்றும் அன்புடன்.

**அருட்தந்தை. முனைவர் ஜெறோம் C.**
இயக்குநர், மிட்ஸ்



# உலக உணவு பாதுகாப்பு நாள் 2024

**மேரி பெல்சிட்** MSW, NET, Ph.D.
சமூகப் பணித்துறைத் தலைவி,
நாஞ்சில் கத்தோலிக்கக் கலை மற்றும்
அறிவியல் கல்லூரி, களியக்காவிளை

**"உண்டி முதற்றே உலகு
உணவே மருந்து, உணவே அடிப்படை,
தனியொருவனுக்கு உணவில்லை எனில்
ஜெகத்தினை அழித்திடுவோம்"**

இந்த உண்மையை உலகிற்கு அறிந்து அறிவித்தவன் தமிழன். திருவள்ளுவர் கூட "சரியான உணவைச் சாப்பிட்டால், உடலுக்கு மருந்தே தேவையில்லை" என்று சொல்கிறார். உடல் ஆரோக்கியமாக இயங்கவும், மனம் உற்சாகமாகச் செயல்படவும், உணவே அடிப்படையாக இருப்பதால் தான் அந்த காலத்தில் இருந்து இந்தக் காலம் வரை உணவு பற்றிப் பேசிக்கொண்டேயிருக்கின்றோம்.

புதிது, புதிதாக உணவுப் பொருட்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஒரு பக்கம் நவீன உணவுகள், இன்னொரு பக்கம் பாரம்பரிய உணவுகள். புதிது புதிதாக உப்புகள்; எண்ணெய்கள்...

"இந்த உணவை 15 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டால் இந்த நோய் பக்கத்திலே வராது".

"இந்த நான்கையும் அரைத்து சாப்பிட்டால், எலும்புத் தேய்மானம், இதய பலவீனம், எல்லாமே சரியாகி விடும்".

"இந்த விதையை மட்டும் அரைத்துச் சாப்பிட்டால், 48 மணி நேரத்தில் புற்றுநோய் குணமாகி விடும்".

வாட்ஸ்அப்பைத் திறந்தாலே, இப்படியான செய்திகள் வந்து கொட்டுகின்றன. எதையுமே யோசிக்காமல், பத்து குரூப்புகளுக்கு ஃபார்வார்டு செய்து விட்டு, ஏதோ பெரும் சேவை செய்ததாகத் திருப்தி அடைபவர்கள் நம்மில் பலர் உண்டு. இது மிகப்பெரிய சமூகப்பிரச்சனை. பல உணவுப் பொருட்கள் பற்றி மக்கள் மத்தியில் தவறான நம்பிக்கைகள் உருவாக்கப்பட்டுள்ளன. கற்பனையாகவும், உண்மைக்கு அப்பாற் பட்டதாகவும் இருக்கின்ற இந்த சூழ்நிலையில் விழிப்புணர்வு ஊட்டுவதற்காகவும் தான், உலக உணவு பாதுகாப்பு நாள், ஆண்டுதோறும் ஜூன் மாதம் 7-ம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.

கற்கால மனிதருக்கு உணவு என்பது ஆடம்பரம். ஒவ்வொரு நாளும் தேடல்தான். உணவுக்கான இந்த தேடல்தான் மனிதர்களை நாகரிகமடையச் செய்தது. பத்தாயிரம் ஆண்டு களுக்கு முன்பு நவீன மனிதர்கள் வேளாண்மை யைக் கண்டறிந்தார்கள். ஆற்றங்கரையோரங்களில் தாம் அறிந்த உணவுகளைத் தம் தேவைக்கு விளைவித்துக் கொண்டார்கள். இப்போது உணவில் நமக்கான வாய்ப்புகள் அதிகரித்து விட்டன. தமிழ்நாட்டின் ஒரு மூலையில் அமர்ந்து கொண்டு, வெளிநாட்டு உணவுகளைச் சாப்பிட முடிகிறது. உணவுப் பொருள்கள் பதப்படுத்தப் பட்டு கப்பலில் வந்திறங்குகின்றன. உலகத்தின் வகைவகையான உணவுகள் நம் வீட்டுக்கு அருகிலிருக்கும் சூப்பர் மார்க்கெட்டுகளில் பேக்கிங் செய்யப்பட்டுக் கிடைக்கின்றன.

அடிதட்டு மக்கள் முதல், ஆடி காரில் பயணிப்போர் வரை, உணவு விஷயத்தில் தேடல் மிக்கவர்களாகவே இருக்கிறார்கள். யூடியூபில் வரும் வீடியோக்கள் தினம் தினம் புதுப்புது உணவுகளை அறிமுகம் செய்கின்றன. இன்னொரு பக்கம், “இதெல்லாம் நம் பாரம்பரிய உணவுகள், இதைச் சாப்பிட்டுத்தான் நம் முன்னோர் பலசாலிகளாக இருந்தார்கள்” என்றெல்லாம் சொல்லப்பட்டுப் பரிந்துரைக்கப் படும் பல உணவுகள் எளிய மக்கள் வாங்க முடியாத விலையில் இருக்கின்றன.

நாம் உணவு உண்பதில் கவனமாக இல்லாவிட்டால், நாம் உண்ணும் உணவு பல உடல்நிலை பிரச்சனைகளுக்குக் காரணமாகி விடுகிறது. நாம் உணவைத் தயாரிப்பதிலும், பாதுகாப்பதிலும், உண்பதிலும் கவனமாக இல்லாவிட்டால், நம்மால் எளிதில் பார்க்க முடியாத நுண்கிருமிகளின் தாக்கம் உணவைக் கெட வைப்பதோடு உண்பவர் ஆரோக்கி யத்தையும், ஏன் உயிரையும் இழக்க நேரிடும்.

உணவு குறித்த நம்பிக்கைகள் அனைத் தையும் பகுத்து ஆராய்ந்து, அதன் உண்மைத் தன்மையை திறந்த மனதோடு பகிர்ந்து கொள்ளவும், அவற்றைப் பாதுகாக்கவும், ஒரு உணவுப்பொருளில் எத்தகைய சத்துக்கள் அடங்கி இருக்கின்றன, எவ்வாறு விளைவிக்கப் படுகிறது, எவ்வாறு சந்தையாக்கப்படுகிறது, எவ்வாறு பதப்படுத்தப்படுகிறது, எப்படி சமைக்கப் படுகிறது, எவ்வாறு உட்கொள்கிறோம், இவை யனைத்தும் உணவுப் பாதுகாத்தலில் அடங்கும்.

உணவு என்பது தனிமனிதர்களின் பொருளாதாரத்தை மட்டுமன்றி, தேசத்தின் பொருளாதாரத்தையும் தீர்மானிக்கிறது. நம் இந்தியாவில் விளையாத உணவுப்பொருளை இன்னொரு நாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் போது, நம்மூர் உற்பத்தியாளர்கள் பாதிக்கப் படுகிறார்கள். அந்நியச் செலாவணி இழப்பு இன்னொரு பெரிய பாதிப்பு.

இந்தியாவில் 135 கோடி மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் மூன்று வேளை சாப்பிட வேண்டும். அதற்கான உணவுச் சந்தை என்பதும், உணவு சார்ந்த மருத்துவச் சந்தையும் மிகப் பெரியது. உணவுக்குப்பின்னால் மிகப்பெரிய வணிகமும் சர்வதேச அளவிலான அரசியலும் இருக்கிறது. அதனால் உணவைப் பற்றிய உண்மைகளைத் தெரிந்துகொள்ள வேண்டிய தேவை இருக்கிறது.

எனவே, உலக உணவு பாதுகாப்பு நாளில், மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும், ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், பொறுப்பேற் போம். தனிமனிதப் பங்கு மட்டுமன்றி, குடும்ப, சமூகத்தின் பங்கும் இதில் இருக்கிறது. எதிர்பாராததை எதிர்கொள்ள நாம் அனைவரும் இணைந்து தயாராகுவோம். இது காலத்தின் கட்டாயம்.



ஒரு டாக்டர் அவரு கிட்ட ரெண்டு காரு மூணு பைக் இருந்தாலும் டெய்லி நடந்தே ஹாஸ்ப்பிட்டல்க்கு போவாராம்

ஏன் ?

ஏன்னா அவரு “கால்நடை மருத்துவராம்” அதான் நடந்தே போவாராம்



# தியாகத்தின் உறைவிடம் தந்தையர்





**Dr. ஏஞ்சல் ஜெயலெட் ராணி**
தச்சூர்கோணம்

தந்தையர் தினம் என்பது உலகெங்கிலுமுள்ள தந்தையர்களை கௌரவிப்பதற்காக ஜூன் மாதம் மூன்றாம் ஞாயிறு கொண்டாடப்படுவதாகும். அன்னையர்களைப் போற்றுவதற்கு அன்னையர் தினம் கொண்டாடப்படுவதைப்போல, தந்தையர் தினம் கொண்டாடப்படுவது வரவேற்கத் தக்கதாகும். நாம் வளரும் போது தாய் நம்மை அன்புடன் வழிநடத்துவார். ஆனால் தந்தை மிகக் கண்டிப்பானவராக இருப்பார். பெரும்பாலும் வேலை நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் பெரும்பாலான தந்தையர்கள் குழந்தைகளுடன் நேரம் செலவிடுவதே இல்லை. இதன் காரணமாக தந்தை என்பவர் குழந்தைகளிடமிருந்து தூரமானவராகவே காணப்படுகிறார் என்ற கருத்து பலருக்கும் எரிச்சல்தான் தரும். ஆனால் தந்தையின் கண்டிப்புதான் நம்மை சிறப்பாக வழிநடத்தியது என்பதை நாம் தந்தையர்களான பிறகே உணர்வோம்.

தந்தையர் தினம் அன்னையர் தினம் கொண்டாடப்படும் அளவுக்குத் தந்தையர் தினம் வெகு சிறப்பாக கொண்டாடப்படுவதில்லை. வாழும் காலத்திலேயே நமக்காகவே வாழும் ஒரு மனிதரை கொண்டாடுவதே அவர்களுக்கு நாம் செய்யும் மரியாதையாக இருக்கும்.

1908-ஆம் ஆண்டு ஜூலை 5ஆம் தேதி மேற்கு விர்ஜினியாவில் சுரங்க விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் 100க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இது ஓர் ஞாயிற்றுக்கிழமை. எனவே ஓர் ஞாயிற்றுக்கிழமையை தந்தையர் தினமாகக் கொண்டாடலாம் என்ற கருத்தை பிரபலங்கள் முன் வைத்தனர்.

இருப்பினும் 1882-ஆம் ஆண்டு அமெரிக்காவைச் சேர்ந்த “சொனாரா லூயிஸ் ஸ்மார்ட் டாட்” என்ற பெண் தனது தந்தையை பெருமைப்படுத்தும் விதமாக நடத்திய நிகழ்வே தந்தையர் தினமாகக் கொண்டாடப்படுவதாக வரலாறு சொல்கின்றது.

16 வயதிலேயே தந்தையை இழந்த செனோரா ஒருமுறை தேவாலயத்தில் நடந்த அன்னையர் தினவிழாவில் பங்கெடுத்திருக்கிறார். அப்போது தாயாகவும், தந்தையாகவும் இருந்து தன்னையும் தன்னுடைய 5 சகோதரர்களையும் வளர்த்த தந்தை வில்லியம் ஸ்மார்ட்டுக்கு ஏன் இப்படி ஒரு தினம் இல்லை என்ற எண்ணம் உதித்திருக்கிறது. அதை அப்படியே அவர் தேவாலயத்தில் பகிர பல்வேறு முயற்சிக்குப் பிறகு தனது தந்தையை நினைவு கூரும் நிகழ்வை 1900-ம் ஆண்டு ஜூன் மாதம் 3-ம் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடியிருக்கிறார் செனோரா. பின்னர் வெகு சீக்கிரமாகவே அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளில் தந்தையர் தினம் பரவி விட்டது. அதிலிருந்து 6 ஆண்டுகள் கழித்து 1916-ம் ஆண்டு அமெரிக்க அதிபராக இருந்த உட்ரோ வில்சன் இந்த தினத்தை அதிகாரப் பூர்வமாக தந்தையர் தினமாக அறிவித்திருக்கிறார். இதுவே இன்று 70க்கும் மேற்பட்ட நாடுகளில் ஜூன் 18 சர்வதேச தந்தையர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

தந்தையர் தினம் மட்டுமின்றி எல்லா நாட்களிலும் தந்தையர்களை மதித்து நடப்பது அவசியம்.

அப்பாக்கள் முட்களை மிதிப்பதால் பிள்ளைகள் பூக்களால் சூழப்பட்டிருக்கின்றனர். தெய்வத்தால் ஆகாதது கூட பிள்ளைகளுக்கு அப்பாக்களால் செய்து தரப்படும். தாயுமான தந்தையர்கள் ஏராளம் உலகில் உண்டு.

அப்பாக்கள் இல்லாத உலகம் பூக்கள் அற்ற வசந்தம் போன்றது. இருக்கும் போதே பூக்களை முழுதாய் முகர்ந்து கொள்வோம்.!

*அனைவருக்கும் தந்தையர் தின வாழ்த்துக்கள்*




**பூ**மி உதித்த காலத்தில் இருந்து ஒவ்வொரு உயிரினமும் வாழ முக்கியம் இந்த பூமியின் சுற்றுச்சூழல் தான். மனிதர்கள் உட்பட அனைத்து உயிரினங்களும் வாழ இன்றியமை யாதது புவிதான்.

சுற்றுச்சூழல் சமநிலை என்பது மனிதர்கள், விலங்குகள், பறவைகள், தாவரங்கள், கடல்வாழ் உயிரினங்கள் போன்றவற்றின் நல்வாழ்விற்கு அடிப்படையானது. இந்த சமநிலையில் ஏற்படும் மாற்றங்கள் சுற்றுச்சூழலை மட்டுமன்றி, உயிரினங்களின் வாழ்வுக்கும் அச்சுறுத்தலாகவும் ஆபத்தாகவும் அமையும்.

வளர்ச்சி, தொழில்நுட்பம் எல்லாம் தவிர்க்க முடியாத ஒன்று. அதே நேரம் இதனால் ஏற்படும் மாற்றங்கள் சுற்றுச்சூழலை பெரிதும் பாதித்து வருகின்றன. வளர்ச்சி மனிதனுக்கு உயர்வைத் தருவதோடு அதன் பக்கவிளைவுகளையும் சந்திக்க வைக்கும். அதனால்தான் மனிதர்கள் சுற்றுச்சூழலையும் கருத்தில் கொண்டு நடக்க வேண்டும் என்பதை உணர்த்த ஆண்டுதோறும் ஜூன் 5 ஆம் தேதியை உலக சுற்றுச்சூழல் தினமாக அனுசரிக்கிறோம்.

**மேற்கு தொடர்ச்சி மலைகளின் ஓலக்குரல்**

சில ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டின் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆரல்வாய் மொழியில் இருந்து திருவனந்தபுரத்துக்கு செல்லும் சிறிய சாலையில் பயணிக்கும் போது கண்ட சில காட்சிகள். வானளாவ உயர்ந்து நிற்கும் மேற்கு தொடர்ச்சி மலைகளின் அழகையும், சாலையின் இரண்டு பக்கங்களிலும் தூண்களாக மிகப்பெரிய ஆலமரங்களும் அந்த நிழலிலே பயணிக்கும் போது மரங்களில் கூடுகட்டி சத்தத்தை எழுப்பிக் கொண்டு இருக்கும் பறவை இனங்களையும் ரசித்துக் கொண்டு, அல்லிகள் நிறைந்த குளங்கள் பிரகாசமான பச்சை பசேலென்ற நெல் வயல்கள் மற்றும் தென்றலிலே அசையும் தென்னை, வாழை மரங்களின் அழகை ரசித்துக்கொண்டு பயணித்திருப்போம்.

**அன்று நாம் வியந்து பார்த்த அந்த குமரிக்கு என்ன ஆயிற்று?**

இயற்கை வாரி வழங்கிய கொடைகளை வளர்ச்சி என்ற பெயரில் அழித்து புது விரைவு சாலைகளை அமைத்து இயற்கை வளங்கள், மரங்கள், வயல்வெளிகள், குளங்கள் முற்றிலும் இல்லாமல் போகும் அளவிற்கு நம் கன்னியா குமரி மாவட்டம் மாறிக் கொண்டிருக்கிறது இதற்கு காரணம் யார்? நாம் அனைவரும் தான்!.

**நான் தான் மேற்கு தொடர்ச்சி மலை பேசுகிறேன்....**

கன்னியாகுமரி மாவட்டத்தின் தெற்கின் அரணாக, பாதுகாவலனாக உயர்ந்து கர்வத் தோடு நிமிர்ந்து நின்றேன். என்னுடைய வேர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, இமய மலைகளுக்கும் முன்பே பூமியை உறுதியாக பற்றிப் பிடித்துள்ளேன். நான் யுகங்கள் கடந்து செல்வதையும் பேரரசுகளின் ஆட்சியும், எழுச்சியும், வீழ்ச்சியும், பருவ மழைகளின் நடனமும், பழமையான மரங்களின் கூடே கடந்து செல்லும் காற்றின் மௌனமான கிசுகிசுப்பையும் பார்த்திருக்கிறேன்.

என் பச்சை பசேல் என்ற மரகத மேலங்கி எண்ணற்ற உயிர்களுக்கு அடைக்கலம் அளித்தது, பல்வேறு உயிரினங்களுக்கு உயிரூட்டியது; மற்றும் இயற்கையின் சீற்றத்திற்கு எதிராக ஓர் அரணாக செயல்பட்டது.

ஆனால், இன்று என் இதயம் ரத்த கண்ணீர் வடிக்கின்றது. ஏனென்றால் காலத்தின் மென்மையான பார்வை என் மேல் முன்னேற்றம் என்ற கடுமையான பேரிடியாக விழுந்தது. ஒரு காலத்தில் என் பசுமையான அரவணைப்பிற்குள் ஊடுருவி வளைந்து நெளிந்து சென்ற சாலை, அதில் சென்ற வாகனங்கள் நான் தாங்கிய உயிர் நாடியை விழுங்கிவிட்டன. வானத்தைப் பிரதிபலித்த செழிப்பான நெல்வயல்கள் இப்போது கான்கிரீட் வீடுகளின் அடியில் கிடக்கின்றன, அவற்றின் வளமான மண் வளர்ச்சி என்ற போர்வையில் மூச்சுத் திணறடிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளது.

ஒரு காலத்தில் பயணிகளுக்கு ஆறுதல் அளித்த கம்பீரமான ஆலமரங்கள் எங்கே போய்விட்டன? இன்று அவற்றின் இடத்தில் சூறையாடப்பட்ட தழும்புகளின் மீது போடப்பட்ட சாலைகளாக காட்சியளிக்கிறது. பூமியின் இயற்கை பேரழகிற்கு ஒரு சான்றாக இருந்த என் அழகிய மலைச்சரிவுகள் இப்போது உடைக்கப்பட்டு, காயங்களைத் தாங்கி உலகம் வேடிக்கை பார்க்க வைக்கப்பட்டுள்ளது.

பல நூற்றாண்டுகளாக இடைவிடாமல் பெய்யும் பருவமழையின் பெருவெள்ளத்தை நான் தடுத்து நிறுத்தினேன். என் சரிவுகள் இயற்கையான பஞ்சு போல் செயல்பட்டு, பிரளயத்தை உறிஞ்சி மெதுவாக வெளியேற்றி நிலத்தை வளப்படுத்தினேன். நதிகள் என் இதயத்தில் குருதி போல் ஓடி வளமான பள்ளத்தாக்குகளை உருவாக்கி கடலுக்கு நீர் வழங்கின. இயற்கையின் சீற்றத்திலிருந்தும் புயல் சீற்றத்திற்கும் எதிராக ஒரு கவசமாக உங்களை (மக்களை) பாதுகாத்தேன்.

ஆனால் என் பொறுமை குறைந்து வருகிறது. ஒவ்வொரு குண்டு வெடிப்பும், உடைக்கப்பட்டு விழும் ஒவ்வொரு பாறாங்கல்லும், இழந்த நல்லிணக்கத்திற்காக நான் சிந்திய கண்ணீர். வளர்ச்சி என்ற பெயரில் என்னை துண்டாடுவதும் என் அங்கங்களை அகற்றுவதும் எதற்காக? உங்களைப் பாதுகாத்தேனே அந்த நற்செயலுக்காகவா? மனிதர்களின் முன்னேற்றத் திற்காக இந்த இடைவெளி இல்லா நாட்டம் என்னை சிதைத்து அல்லல்படுத்துகிறது. மனித குலமே விழித்துக் கொள்! இன்று வரலாற்று நிற்கதியாக கண்ணீரோடு நிற்கிறேன் இன்று எனக்கென்ன பாதிப்பு என்றெண்ணி நிற்போமேயானால் நாளை வரும் இயற்கை பேரிடர்களை நீ தனியாக சந்திக்க உன்னை ஆயத்தப்படுத்திக் கொள். அரசியல் ஆதாயத் திற்காகவும், கோடிகளில் சம்பாதித்துக் கொள்ளலாம் என்ற பேராசையில் என்னைக் கூறு போடுகிறீர்களே! உடனே நிறுத்தி விடு! உடைத்ததுபோதும்! உன்னால் உருவாக்கமுடியாத ஒன்றை ஒருபோதும் அழிக்க நினைக்காதே! பூமியில் வாழும் போது இயற்கை கொடையாகக் கொடுத்த வளங்களின் பலனை அனுபவித்து அடுத்த தலைமுறைக்கு விட்டு செல்!.

கண்ணீருடன் பாதுகாப்பை எதிர்பார்த்து நிற்கும் இயற்கை வளங்கள் நாங்கள் மேற்குத் தொடர்ச்சி மலைகள்.

**மேற்கு தொடர்ச்சி மலைகளின் வேண்டுகோள் கவிதை**

**என் மரகத மேலங்கி ஒரு காலத்தில் துடிப்பாகவும்**
**பச்சை பசேலென்றும் இருந்தது,**
**இப்போது முன்னேற்றத்தின் தழும்புகளை தாங்கி**
**நிற்கிறது நொறுக்கப்பட்டு,**
**தென்றலுக்கு ரகசியங்களை கிசுகிசுத்த மரங்கள்**
**இப்போது சிதறி கிடக்கின்றன. முழங்காலில் விழுந்து**
**வாழ்வின் இனிய பல்லவிகளை பாடிய நதிகள்**
**இப்போது குப்பைகளால் மூச்சுத் திணறி**
**வேதனையில் உள்ளன.**
**பல வகை உயிரினங்களை தழுவிய நிலம்**
**இப்போது ஓயாத மனித இனத்தின் சுமையை சுமக்கிறது.**
**பூமியின் குழந்தைகளே என் வேண்டுகோளை கேளுங்கள்!**
**என் குரல் முழுவதுமாக நசுக்கப்படுவதற்கு முன்**
**என்னை முழுவதுமாக விழுங்குவதற்கு முன் உன்**
**குரலை உயர்த்திடு!**
**நான் புயலிலிருந்து உங்களை காக்கும் கவசம்**
**இப்போது என்னை காப்பாற்றுங்கள் மறுபடியும்**
**உங்களை பாதுகாக்க!**
**கைகோர்ப்போம்! சரி செய்வோம்!**
**இயற்கை வளங்களை பேணிக் காப்போம்.**

மேற்குத் தொடர்ச்சி மலைகள், இயற்கை வளங்கள் மறு பிறவி எடுக்கட்டும்; பிறக்கட்டும்!



# அப்பா

அன்புள்ள அப்பா. . .
நான் பிறந்தநேரம் என்முகம் பார்க்க ஏங்கினாய் . . .
நான் அழும் குரல் கேட்டு ஏனோ நீ அலறினாய் . . .
என் பிஞ்சு விரல்களை தொட்டதும்
ஆனந்தத்தில் அழுதுவிட்டாய் . . .
அன்று அழுத அந்த ஆனந்தக் கண்ணீரையும்
நான் கண்டதில்லை . . .
இன்றுவரை உங்கள் மனதில் உள்ள வலிகளை
பிறரிடம் வெளிப்படுத்தியும் நான் கண்டதில்லை.. . .
பிள்ளையின் எதிர்காலம் செழிக்க - எதையும் எதிர்பாராமல்
உழைத்துக் கொண்டிருக்கிறாய் . . .
என் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற - உன் எதிர்கால
ஆசைகளை அழித்துக்கொண்டாய். . .
வீரத்துடன் சுற்றினாலும் ஏனோ - என் கண்கலங்கும் போது மட்டும்
மனம் நொறுங்கிவிடுகிறாய் . . .
வெளிப்படுத்தாத அன்பு. . . வியக்க வைக்கும் மௌனம். . .
உடையாத நம்பிக்கை . . .என் கனவுகளின் கோவில். . .
ஆறுதலுக்காக ஆண்டவன் அளித்த அன்பு உள்ளம் அப்பா. . .

**R.J. Jersha**
Chellamkonam



# செம்பருத்தி பூ ஜூஸ்

**திருமதி. சுகுமாரி**
அமைப்பாளர்

**தேவையான பொருட்கள்**

1. தண்ணீர் - 5 கப்
2. செம்பருத்தி பூ - 10 பூவின் இதழ் மட்டும்
3. எலுமிச்சைபப்பழம் - 1
4. இஞ்சி - 1 துண்டு தோல் நீக்கி சதைத்து வைக்க வேண்டும்
5. தேன் - தேவைக்கு
6. உப்பு - கொஞ்சம்

**செய்முறை**

தண்ணீர் நன்றாக கொதிக்கும் போது செம்பருத்தி பூ இதழை போடவேண்டும். பூ வெந்ததும் தண்ணீரின் நிறம் கரும் ஊதா நிறமாக மாறும். அப்போது 3 நிமிடம் கழித்து அந்த இதழ்களை வெளியில் எடுக்க வேண்டும். அதன் பின் சதைத்த இஞ்சியை கொதிக்கும் தண்ணீரில் போட வேண்டும். 2 நிமிடத்திற்கு பிறகு எலுமிச்சைப் பழச்சாற்றை ஊற்ற வேண்டும். அது அழகான குங்கும கலராக மாறும். அப்போது கொஞ்சம் உப்பு போட வேண்டும். அதன் பின் தேவையான அளவு சீனி போடவேண்டும். அதன் பின் அடுப்பை விட்டு பாத்திரத்தை கீழே இறக்கி வைத்துவிட்டு சூடு ஆற வைத்து குடிக்க வேண்டும்.

# தந்தையர் தினம்




தந்தை போல் உலகில் யாருமில்லை!
தந்தையின் பாசத்தில் பேதமில்லை!
தந்தையைப் படி, புத்தகம் தேவையில்லை!
தந்தை சொல்லை விட வேதமில்லை!
தந்தை சொல்படி கேள், சோகமில்லை!
தந்தையயை போல் ஆசானில்லை!
தந்தையை பலர் இங்கே அறியவில்லை!
தந்தையின் மொழி புரியவில்லை!
தந்தை, பிள்ளைகள் முன் அழுததில்லை!
தந்தையை பிள்ளைகள் தொழுதது இல்லை!
தந்தையை விட ஆகாயம் பெரிது இல்லை!
தந்தைக்கோர் தாலாட்டு இல்லை!
தந்தையை யாரும் பாராட்டவில்லை!
தந்தையின் வேர்வை உறையவில்லை!
தந்தையை பலர் உணரவில்லை!
தந்தையை விட கங்கை புனிதம் இல்லை ! ! !

*D. Mini*

**என் இனிய தந்தையர் தின வாழ்த்துக்கள்**




**சீ**னாவில் ஒரு பெரியவர் இருந்தார். அவருக்கு மூன்று மகன்கள். முதல் இரண்டு மகன்களுக்கும் திருமணம் ஆகியிருந்தது. எப்போதும் வீடு மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால், மருமகள்கள் தங்கள் தாய் வீட்டுக்குச் சென்றால், விரைவில் திரும்பி வர மாட்டார்கள்.

அன்றும் மருமகள்கள் தாய் வீடு செல்ல அனுமதி கேட்டனர். பெரியவர், போய் வாருங்கள். வரும்போது நீங்கள் எனக்கு இரண்டு பொருட்களைக் கொண்டு வர வேண்டும். கொண்டு வராவிட்டால், மீண்டும் உங்கள் அம்மா வீடு செல்ல அனுமதிக்க மாட்டேன் என்றார்.

சரிங்க மாமா. என்ன வேணும், சொல்லுங்கள்? என்றனர் இரு மருமகள்களும்.

ஒரு காகிதத்தில் கொஞ்சம் காற்றை அடைத்துக் கொண்டு வரவேண்டும் என்று ஒரு மருமகளிடமும், "காகிதத்தில் கொஞ்சம் தீயை கட்டிக் கொண்டுவர வேண்டும்" என்று இன்னொரு மருமகளிடமும் சொன்னார் பெரியவர்.

இதைக்கேட்ட மருமகள்கள் இருவரும் திகைத்தனர்.

சரி, பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று கிளம்பி விட்டனர். தாய் வீட்டில் சந்தோஷசமாகச் சில நாட்கள் இருந்தார்கள். வீடு திரும்ப வேண்டிய நாள் வந்ததும்தான் மாமனார் கேட்ட விஷயம் பற்றிய பயம் வந்தது.

இருவரும் கிளம்பினார்கள். வழியெங்கும் கவலையோடு புலம்பிக்கொண்டே நடந்தனர்.

அப்போது எருமை மீது சவாரி செய்து கொண்டு வந்த ஓர் இளம்பெண், உங்களுக்கு என்ன பிரச்சனை என்று கோட்டார்.

இவர்களும் தங்கள் மாமனார் கேட்டதைச் சொன்னார்கள்.

அந்தப் பெண், இவ்வளவுதானா, கவலைப்படாதீர்கள் என்று சிரித்தார்.

முதல் மருமகளைப் பார்த்து, ஒரு காகிதத்தில் விசிறி செய்து கொடு. நீ ஒரு சிம்னி விளக்கை ஏற்றி, ஒரு காகிதத்தில் சுற்றி எடுத்துட்டுப் போ என்றனர்.

மருமகள்கள் இருவருக்கும் பிரச்சினை தீர்ந்ததில் மகிழ்ச்சி. அந்தப் பெண்ணுக்கு நன்றி சொல்லிவிட்டுக் கிளம்பினார்கள்.

மாமனாரிடம் அந்தப் பெண் கூறியபடியே விசிறியையும், சிம்னி விளக்கையும் தந்தார்கள். அவர்கள் ஆச்சரியப்பட்டார். இருவரும் வழியில் சந்தித்த அந்தப் பெண் பற்றிச் சொன்னார்கள்.

இவ்வளவு புத்திசாலியான பெண்ணை, என் கடைசி மகனுக்கு மணம் முடிக்கப் போகிறேன் என்றார் பெரியவர்.

அந்தப் பெண்ணைத் தேடிக் கண்டுபிடிக்க ஆட்களை அனுப்பினார். கண்டுபிடித்துச் சொன்னதும், சம்பந்தம் பேசினார்.

திருமணம் இனிதே நடந்து முடிந்தது. வீட்டில் அனைத்தையும் பொறுப்பாகச் செய்தார் கடைசி மருமகள்.

பெரியவருக்கு மகிழ்ச்சி நிறைவான வாழ்க்கை வாழ்ந்தார். எனவே தன் வீட்டு வாசலில், இது நிறைவான வீடு என்று ஒரு பலகையை மாட்டி வைத்தார்.

சில காலம் கழித்து அந்த வழியே சென்ற துறவி இந்தப் பலகையைப் படித்தார். யார் இது, இவ்வளவு திமிராக எழுதி வைத்தது? இந்த வீட்டினருக்குப் பாடம் புகட்டி, திமிரை அடக்கப் போகிறேன் என்று முடிவு செய்தார்.

வீட்டில் நுழைந்த அவரை, கடைசி மருமகள் தான் வரவேற்றார். துறவி, இது நிறைவான



என்னால் மட்டுமே என் வாழ்க்கையை மாற்றமுடியும். எனக்காக இன்னொருவர் அதை செய்யமுடியாது.
- கரோல் பர்னெட்

வீடாமே. அப்படியானால் எனக்கு இந்தச் சாலையின் நீளத்துக்கு ஒரு துணியை நெய்து கொடு. இல்லாவிட்டால் சபித்து விடுவேன் என்றார்.

கண்டிப்பாக நெய்கிறேன். சாலையின் இரு முனைகளையும் கண்டுபிடித்து, எவ்வளவு நீளம் என்று அளந்து தாங்கள் சொன்னால், அந்த அளவுக்கு நான் துணியை நெய்து கொடுக்கிறேன், என்றார் மூன்றாவது மருமகள்.

அவர்கள் வீடு இருந்த சாலை எங்கோ வெகு தொலைவில் இருந்த தலைநகரத்திலிருந்து நாட்டின் எல்லைவரை சென்றது. அதன் ஆரம்பமும் முடிவும் யாருக்கும் தெரியாது என்ப தால் துறவிக்குப் பதில் சொல்ல முடியவில்லை.

சரி. வேண்டாம், கிணற்று நீர் அளவு எண்ணெய் ஆட்டிக் கொண்டுவா என்றார் துறவி.

தாங்கள் தயவுசெய்து கிணற்றில் எத்தனை ஆழாக்கு நீர் உள்ளது என்று சொன்னால். உடனே அத்தனை ஆழாக்கு எண்ணெய் ஆட்டித் தந்துவிடுகிறேன் என்றார் மூன்றாவது மருமகள் பணிவோடு.

துறவிக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. சில நொடிகள் யோசித்தார். இந்தப் புத்திசாலிப் பெண்ணை மடக்குவது எளிதல்ல என்பதை உணர்ந்தார். யோசித்தபடியே பறந்து வந்த ஒரு புறாவைச் சட்டென்று பிடித்தார்.

நீ மிகவும் புத்திசாலியாக இருக்கிறாய். இந்தப் புறாவை நான் பறக்க விடப் போகிறேனா, இல்லை கூண்டுக்குள் அடைக்கப் போகிறேனா, என்று சொல் பார்ப்போம் என்றார் துறவி.

புத்திசாலி மருமகள் துறவியை வணங்கி, நீங்கள் முக்காலமும் அறிந்த ஞானி, வாசலில் நிற்கும் நான் இப்போது உள்ளே செல்லப் போகிறேனா, இல்லை தெருவில் இறங்கப் போகிறேனா என்று சொல்லுங்கள். நானும் உங்கள் கேள்விக்கு விடை தருகிறேன் என்றார்.

துறவி அமைதியாக இருந்தார். துறவியான தங்களுக்கே என் கேள்விக்கு விடை தெரியாத போது, அனைத்தும் அறிந்த ஞானியான தங்களது கேள்விக்கு எனக்கு எப்படி விடை தெரியும்? என்று கேட்டு மீண்டும் அவரை வணங்கினார் மூன்றாவது மருமகள்.

நீ சொல்வதும் சரிதான். இந்த வீடு நிறைவான வீடுதான் என்று சொல்லி விட்டு, துறவி தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

பொறுமையைவிட, மேலான தவமுமில்லை. திருப்தியை விட மேலான இன்பமுமில்லை.

இரக்கத்தைவிட உயர்ந்த அறமுமில்லை. மன்னித்தலை விட ஆற்றல் மிக்க ஆயுதமுமில்லை.

தோல்விகள் சூழ்ந்தாலும், இருளை விலக்கும் கதிரவன் போல அதனை நீக்கி அடுத்தடுத்த வெற்றி படியில் கால் அடி எடுத்து வைப்போம். முடியும் வரை அல்ல, நம் இலக்கினை அடையும் வரை இந்த விடியல் நம் வாழ்விலும் விடியட்டும்!

முக மலர்ச்சியோடும், நம்பிக்கையுடனும் எழுந்து புதிய நாளை துவங்க இறைவன் அருள் புரியட்டும்!

## மிட்ஸ் நிறைவாழ்வு சங்கம்



மிட்ஸ் நிறைவாழ்வை நோக்கிய பயணத்தில் குழுக்களில் உறுப்பினர்களின் வளர்ச்சியில் சேமிப்பும் பங்கு வகிக்கிறது. சேமிப்பு, குழுக்கடன் மற்றும் மிட்ஸ் நிறுவனத்திலிருந்து வழங்கப்பட்ட பல்வேறு திட்டங்களின் கடன் தொகையினை ஒவ்வொரு வருடமும் தணிக்கை செய்யப்பட்டு வருகின்றது. தற்போது நாகர்கோவில் பணி மண்டலக்குழுக்கள் 79, மார்த்தாண்டம் பணி மண்டலக்குழுக்கள் 210 மற்றும் களியக்காவிளை பணி மண்டல குழுக்கள் 195 ஆக மொத்த





குழுக்கள்484. இக்குழுக்களின் கணக்கு செயல்பாட்டினை ஏப்பரல் மாதம் 10-ம் நாள் துவங்கி மே மாதம் 20-ம் நாள் வரையிலும் தணிக்கையானது வெவ்வேறு இடங்களில் வைத்து நடைபெற்றது. இதில் தலைவர், செயலர், பொருளர் ஆகிய பொறுப்பாளர்கள் ஒவ்வொரு குழுவிலிருந்தும் கலந்து கொண்டனர். மேலும் மிட்ஸ் இயக்குநர், திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் ஒருங்கிணைப் பாளர்கள் குழுக்களின் தணிக்கையின் போது பார்வையிட்டனர்.




## மிட்ஸ் குடும்ப வளர்ச்சி திட்டம்

குடும்ப வளர்ச்சி திட்டத்தின் அலகு I மற்றும் அலகு II வழியாக பயன்பெற்று வரும் பயனாளிகளுக்கான கிளஸ்டர் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. கிளஸ்டர் கூட்டங்களில் நீர் மற்றும் கழிவறை சுகாதாரம் குறித்த கருத்துக்களை ஒருங்கிணைப்பாளர்கள் வழங்குவதுடன் மேலும் ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் வழங்கப்பட்ட உதவி தொகையை சரியான முறையில் பயன்படுத்தியுள்ளார்களா என்பது குறித்து பயனாளிகளின் வீடுகளுக்கு சென்று பார்வையிட்டு வருகின்றனர்.







இந்த உலகம் உன்னை திரும்பிப்பார்க்க செய்ய வேண்டும் என்றால்
நீ யாரையும் திரும்பிப்பார்க்காதே, உனது வேலையில் கவனம் செலுத்து

# தளிர்கள் உலகம் திட்டத்தின் வழிகாட்டுதல் பயிற்சி



மிட்ஸ் நிறுவனத்தில் செயல்பட்டு வரும் தளிர்கள் உலகம் திட்டத்தின் பயனாளிகளுக்கு ஆண்டு தோறும் உயர்கல்விக்கான வழிகாட்டுதல் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு 12-ம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவரகளுக்கான வழிகாட்டுதல் பயிற்சியானது 26.03.2024 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் பயிற்சியினை துவங்கி வைத்தார்கள். சிகரம் பயிற்சி மையத்தின் டீன் திரு. காட்வின் ஜினு அவர்கள் பயிற்சியினை நடத்தினார்கள். உயர்கல்விபிரிவுகள் மற்றும் அவற்றிற்கான வேலை வாய்ப்புகள் குறித்து தெளிவாக மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. எந்தப்பாடத்திட்டம் தேர்ந்தெடுத்தால் எந்தெந்த வேலைவாய்ப்புகள் அதிகமாக உள்ளன என்றும் அதற்கான நுழைவுத் தேர்வுகளை எதிர்கொள்வது எப்படி என்பது குறித்தும் விரிவாக விளக்கப்பட்டதுடன் மாணவர்களின் சந்தேகங்களும் தீர்த்து வைக்கப்பட்டன. பின்னர் மரியகிரி கலைக்கல்லூரி, மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி, மலங்கரை ஸ்கூல் ஆப் காமேர்ஸ், IAS அகாடமி ஆகிய கல்வி நிறுவனங்களிலிருந்து பேராசிரியர்கள் வருகை தந்து மாணவர்களுக்கு வழிகாட்டுதல்கள் வழங் கினார்கள். இந்த பயிற்சியானது மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ள முறையில் அமைந்ததாக கருத்து தெரிவித்திருந்தனர். இந்த பயிற்சியில் மொத்தம் 69 மாணவ மாணவிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

13.04.2024 அன்று 10-ம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவர்களுக்கான வழிகாட்டுதல் பயிற்சி மிட்ஸ் அரங்கத்தில் வைத்து நடத்தப்பட்டது. இப்பயிற்சியினை சிகரம் பயிற்சி மையத்தின் இயக்குநர் அருட்தந்தை அகஸ்டின் மற்றும் டீன் காட்வின் ஜினு ஆகியோர் இணைந்து நடத்தினர். காலை 10 மணி முதல் மாலை 3.30 மணி வரை நடைபெற்ற இப்பயிற்சியில் 65 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.







**நிகழ்வுகள்**

1. 11.04.2024 அன்று தளிர்கள் உலகம் திட்டத்தின் மாதாந்திர சிறப்புப் பயிற்சி நடைபெற்றது. அன்றைய தினம் கிரேஸ் மருத்துவமனையின் சார்பாக இலவச பொது மருத்துவம் மற்றும் கண் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. இந்த பரிசோதனை முகாமில் மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் என 100-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.






2. 24.03.2024 அன்று தளிர்கள் உலகம் திட்டத்தின் பயனாளிகளுக்கான மிட்ஸ் அறிவுத் திறன் தேர்வு அனைத்து தேர்வு மையங்களிலும் (மிட்ஸ், மரியகிரி, ஆற்றூர்) நடைபெற்றது.
3. 10.04.2024 அன்று விண்ணைத் தொடு திட்டத்தின் காலாண்டு ஆய்வுக்கூட்டம் அழகியமண்டபத்தில் உள்ள அன்னை ஆதார் பயிற்சி மையத்தில் வைத்து நடத்தப்பட்டது. இந்த கூட்டத்தில் இத்திட்டத்தின் பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

**உதவித்திட்டங்கள்**

16.04.2024 மற்றும் 12.05.2024 ஆகிய தினங்களில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 23 நோயாளிகளின் மருத்துவ செலவிற்காக ரூபாய் 1,30,000/- உதவித்தொகை வழங்கப்பட்டது.

**தளிர்கள் உலக திட்ட பயனாளிகளின் படைப்புகள்**


R.Aravind
Kanchiyode


M.Ashika
XIIth Standard


J.Jilsiya Asmi
VIIth Standard


Ashmi A


Vaishu






மிட்ஸ் தளிர்கள் உலக திட்டத்திலுள்ள எட்டாம் வகுப்பு பயனாளிகளுக்கு மூன்று நாட்கள் பயிற்சியானது 2024 மே மாதம் 8-ஆம் தேதி முதல் 10-ஆம் தேதி வரை மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. மொத்தம் 25 மாணவர்கள் தங்கி, பயிற்சி பெற்றனர். மூன்று நாட்களில் அவர்களுக்கு திரைப்படத்தின் நன்மை தீமைகள், திரைப்படத்தில் எதை எப்படி பார்க்க வேண்டும், அலைபேசியை பயன்படுத்துவது குறித்தும் திருச்சி சலேசிய சபை சார்ந்த அருட்தந்தை ஷாஜன் அவர்களால் பயிற்சி அளிக்கப்பட்டது. வாழ்க்கையின் மதிப்பு, நெறிமுறைகள் குறித்த பயிற்சியானது பயிற்சியாளர் திரு. அலோசியஸ் அவர்களாலும், புத்தகம் படிப்பதின் அவசியம் மற்றும் அதை எப்படி படிப்பது என்பது எழுத்தாளர் மலர்வதி அவர்களாலும் வழங்கப்பட்டது. விழிப்புணர்வு பாடல்கள் திரு.இருதயராஜ் மற்றும் திருமதி. ஜினி ஜெபமலர் அவர்களாலும், காய்கறி தோட்டம் அமைப்பது குறித்த செய்முறை பயிற்சி திரு. மிக்கேல் அவர்களும், எப்படி படிப்பது, அதன் முறைகள் போன்றவை அருட்தந்தை அபிஷேக் அவர்களாலும் வழிநடத்தப்பட்டது. மேலும் மாணவர்களுக்கு உடற்பயிற்சி மற்றும் தியான நிலைகள் குறித்த செய்முறையானது ஆசிரியர் திருமதி.சுனி அவர்களால் கொடுக்கப்பட்டது. முதலுதவி குறித்த விழிப்புணர்வு மற்றும் செய்முறைகள் கிரேஸ் மருத்துவமனை மருத்துவர் அருண் அவர்கள் மற்றும் குழுவினரால் நடத்தப்பட்டது. மேலும் திருப்பலி, மாலை நேர செபம், மாலை நேர விளையாட்டுகள், கலைநிகழ்ச்சிகள் போன்ற அனைத்திலும் குழந்தைகள் உற்சாகமாக கலந்துகொண்டனர். இறுதி நாளில் அனைவருக்கும் காய்கறி விதைகள், இயற்கையோடு இணைந்த வாழ்வு என்ற புத்தகம் மற்றும் பரிசும் வழங்கப்பட்டது.







# விருட்சம்



மிட்ஸ் சமூகத்தின் விளிம்புநிலை மக்களின் வாழ்க்கைச் சூழல் தொழில் முறையில் மேம்படவும், குழந்தைகளின் கல்வி வளர்ச்சி அடையவும் மிட்ஸ் விருட்சம் திட்டம் வாயிலாக மூன்று மாதத்திற்கு ஒரு முறை ஒவ்வொரு மண்டல அளவில் குழுக்களுக்கு கடன் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. அவைகளாவன,

| மண்டலம் | கடன் வழங்கப்பட்ட மொத்த குழுக்கள் | பயனாளிகள் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| களியக்காவிளை | 14 | 56 | 2800000.00 |
| மார்த்தாண்டம் | 14 | 56 | 2800000.00 |
| நாகர்கோவில் | 13 | 52 | 2600000.00 |
| மொத்தம் | 41 | 164 | 8200000.00 |



## கோள்பிங்

மிட்ஸ் கோள்பிங் திட்டத்தின் குழுக்களின் தணிக்கையானது ஏப்ரல் 10-ம் நாள் துவங்கி ஜூன் மாதம் 6-ம் நாள் வரையிலும் கோள்பிங் கிளஸ்டர் அளவில் ஒருங்கிணைப்பாளர் தலைமையில் நடைபெற்றது. தணிக்கையானது ஒருங்கிணைப்பாளர் தலைமையில் அனிமேட்டர் மற்றும் கோள்பிங் குழு பொறுப்பாளர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

# மிட்ஸ் மரியன் இயக்கம்

மரியன் இயக்க திட்ட பயனாளிகளின் கிளஸ்டர் அளவின் கூட்டமானது ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட இடங்களில் வைத்து மரியன் இயக்க ஒருங்கிணைப்பாளர் Sr. அகதா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஒருங்கிணைப்பாளர் அவர்கள் ஒவ்வொரு மரியன் இயக்க பயனாளிகள் தொழில் செய்து முன்னேறும் படியாகவும், பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் எனவும் அறிவுரை கூறினார்





கற்றுக் கொண்டே இருக்கும் வரை உங்களால் இளமையாக இருக்கமுடியும் - எமிலி டிக்கின்சன்

# Changing The Way We Care
# விண்ணைத் தொடு






"Changing The Way We Care" விண்ணைத் தொடு என்ற திட்டத்தின் 4-ஆம் கட்டமைப் பானது "பொறுப்பான சமூகத்தை கட்டியெழுப்பு வோம்" என்ற நோக்கில் 23-05-2024 அன்று நடைக்காவு சமூகநலக்கூடத்தில் வைத்து காலை 10.00 மணி முதல் மதியம் 12.30 மணி வரையிலும், குழு ஆற்றுப்படுத்துதல் 13 வயது முதல் 18 வயது வரையுள்ள மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது.

நடைக்காவு பங்கின் ஆன்ம இயக்குநர் அருட்தந்தை அருள்தாஸ் அடிகளார் இந்நிகழ்வினை துவக்கி வைத்தார். அதனை தொடர்ந்து நாகர்கோவில் Sunlight Wellness centre - ரின் சிறப்பு மருத்துவர் Dr. Araasu [BEMS, MD(ACU)] அவர்கள் மாணவர்கள் அதிகமாக அடிமையாகும் போதைப்பொருட்கள் அலைபேசி, தொலைக் காட்சி, மது போன்றவற்றின் நன்மை தீமைகள் குறித்து கூறினார்கள். பின்னர் அவருடன் இணைந்து பணியாற்றும் Dr.Sachin, Mr.Subash, Mr.Antony Deli ஆகியோர் தங்களின் அனுபவ பகிர்வினை பகிர்ந்து கொண்டார்கள். களியக்காவிளை நாஞ்சில் கல்லூரியின் சமூகபணித் துறை தலைவி திருமதி. மேரி பெல்சிட்டா அவர்கள் மாணவர்களிடம் இருக்கும் பயம், கூச்சம், கோபம் பற்றியும் அலைபேசியின் மூலமாக மாணவர்களிடையே ஏற்படும் உணர்ச்சி ரீதியான அன்பு (Love) குறித்தும் விளக்கினார்கள். இந்நிகழ்வில் CTWWC திட்ட பணியாளர்களும், MSW மாணவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நடைக்காவு, வாவறை, மங்காடு, சூழால், அடைக்காக்குழி, ஏழுதேசம் ஆகிய இடங்களிலிருந்து 56 நபர்கள் கலந்து கொண்டனர்.

## விடுகதைகள்



செல்வன் **S. ஷாபின்**
ஒருங்கிணைப்பாளர்

1. முறையின்றித் தொட்டால்,ஒட்டிக் கொண்டு உயிரை எடுப்பான் - அவன் யார்?
2. வயதான பலருக்கு புதிதாக இரு கை - அது என்ன?
3. அடிக்காமல், திட்டாமல் கண்ணீரை வரவழைப்பாள் - அவள் யார்?
4. உடல் சிவப்பு, வாய் அகலம், உணவு காகிதம் - நான் யார்?
5. ஒன்று போனால் மற்றொன்றும் வாழாது?
6. ஓய்வு எடுக்காமல் இயங்கும். ஓய்வு எடுத்துவிட்டால் மறுபடியும் இயங்காது. அது என்ன?

**விடைகள்**

1. மின்சாரம்
2. வழுக்கை & பொக்கை
3. வெங்காயம்
4. அஞ்சல் பெட்டி.
5. செருப்பு
6. இதயம்

## MIDS Member Welfare Scheme (MMWS)



மிட்ஸ் MMWS திட்டத்தில் உறுப்பினரான இறந்த நபர்களின் வாரிசுக்கு தலா ரூ.10000 வீதம் மொத்தம் 40000/- ரூபாய் கீழ் குறிப்பிட்டுள்ள வாரிசுதாரர்களுக்கு காசோலை வழங்கப்பட்டது.

| வ.எண் | உறுப்பினர் பெயர் | வாரிசு பெயர் | குழு / கோள்பிங் பெயர் | வழங்கப்பட்ட தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 1 | றீத்தா | திரு. மணி | சணையன்விளை | 10000.00 |
| 2 | சுபத்திரா | திரு. பிரபாகரன் | மிட்ஸ் செம்மண்விளை | 10000.00 |
| 3 | ரெத்தினம் | திரு. ராஜ் செல்வம் | மிட்ஸ் ஏஞ்சல் குழு | 10000.00 |
| 4 | கிறிஸ்டல் பிரேமா | திரு. குமாரதாஸ் | மிட்ஸ் இடைக்காட்டுவிளை | 10000.00 |
| | | | மொத்தம் | 40000.00 |

[MMWS திட்டத்திலிருந்து காசோலையானது (உறுப்பினர் late றீத்தா - சணையன்விளை குழு) நாமினி திரு. மணி அவர்களுக்கு வழங்கப்பட்டது]






# Cancer Day Fund Collection 2024

## மிட்ஸ் மார்த்தாண்டம் பணி மண்டலம்

| கிளஸ்டர் | | தொகை (Rs.) |
|---|---|---|
| **ஆற்றூர்** | | |
| 1 | செம்பருத்தி | 800 |
| 2 | மிட்ஸ் ராஜீவ்காந்தி நகர் | 900 |
| 3 | மிட்ஸ் மூவாற்றுமுகம் | 750 |
| 4 | தானங்காட்டுவிளை | 2,000 |
| 5 | செம்பகதோப்புவிளை | 2,000 |
| 6 | வட்டவிளை சுயஉதவிக்குழு | 1,500 |
| 7 | மிட்ஸ் சென்தோமஸ் | 1,100 |
| 8 | மிட்ஸ் அன்னை | 1,100 |
| 9 | மிட்ஸ் சரல்விளை | 800 |
| 10 | ஓடல்விளை | 1,100 |
| 11 | தூத்துவிளை | 350 |
| 12 | மாத்தூர்கோணம் | 500 |
| 13 | ஜீவ ஊற்று | 850 |
| 14 | மிட்ஸ் ரோஜாவனம் | 1,000 |
| 15 | விராலிக்காட்டுவிளை | 1,900 |
| 16 | பால்காரவிளை | 2,035 |
| 17. | பருத்திவிளை | 1,000 |
| 18. | நெடியதறவிளை சுயஉதவிக்குழு | 1,000 |
| 19. | பாரதம்விளை | 2,580 |
| 20. | தமிழரசி | 850 |
| 21. | மிட்ஸ் தேமானூர் | 1,500 |
| 22. | பிடாரன்விளை சுயஉதவிக்குழு | 1,600 |
| 23. | செம்மண்விளை | 850 |
| 24. | சென்ட் பீட்டர் | 750 |
| 25. | மிட்ஸ் வின்னிலா | 1,000 |
| 26. | சென்ட் தேவசகாயம் | 1,030 |
| 27. | தெற்றவிளை | 2,000 |
| 28. | மிட்ஸ் செட்டிவிளை | 500 |
| 29. | மிட்ஸ் பள்ளிக்கோணம் | 500 |
| 30. | தீபாஞ்சான் விளை | 1,000 |
| 31. | வசந்தம் தாணுவந்தோப்பு | 500 |
| 32. | ஜாஸ்மின் வாலத்துவிளை | 400 |
| 33. | பழந்தோட்டத்துவிளை | 1,000 |
| 34. | மிட்ஸ் தெறம்புதட்டுவிளை | 500 |
| 35. | கோனான்விளை | 500 |
| 36. | வள்ளங்குழி | 1,800 |
| | **மொத்தம்** | **39,545** |
| **பூதப்பாண்டி** | | |
| 1. | ரகோபத் | 700 |
| 2. | சாரோன் | 1,250 |
| 3. | சுடர் | 1,100 |
| 4. | காரியாங்கோணம் | 1,200 |
| 5. | மிட்ஸ் கடல் | 1,819 |
| 6. | முக்கடல் | 2,010 |
| 7. | ஏதேன் | 1,125 |
| 8. | சீயோன் | 2,000 |
| 9. | மிட்ஸ் கஸ்தூரி பாய் கிராமம் | 300 |
| 10. | மரியன் | 1,050 |
| 11. | ஏஞ்சல் சுயஉதவிக்குழு | 1,190 |
| 12 | மிட்ஸ் காருண்யா | 2 050 |
| 13. | மிட்ஸ் விண்ணரசி அன்னை | 1,000 |
| 14. | பாரிஜாதம் | 1,500 |
| 15. | இரக்கத்தின் மாதா | 800 |
| 16. | மிட்ஸ் பனானா | 2,200 |
| 17. | மிட்ஸ் ஞாலம் பொற்றை | 650 |
| 18. | மிட்ஸ் ஞாலம் | 1,600 |
| 19. | மிட்ஸ் சிங்களேயர் | 950 |
| 20. | வீரப்புலி | 650 |
| 21. | அற்புத அன்னை | 550 |
| 22. | எபனேசர் | 1,000 |
| 23. | பிளசி | 870 |
| 24. | மிட்ஸ் ஞானதாசபுரம் | 300 |
| 25. | மிட்ஸ் மங்கலம் | 1,050 |
| 26. | இந்திராநகர் | 1,200 |
| 27. | மிட்ஸ் மிக்கேல் | 800 |
| | **மொத்தம்** | **30,914** |
| **சின்னத்துறை** | | |
| 1. | குழந்தை தெரசா | 1,200 |
| 2. | அனுங்கிரகமாதா | 1,400 |
| 3. | மிட்ஸ் கிறிஸ்துராஜா | 1,000 |
| 4. | மிட்ஸ் ஜீசஸ் | 1,500 |
| 5. | மிட்ஸ் ஒளி மாதா | 1,400 |
| 6. | அல்போன்சா | 1,200 |
| 7. | அன்னை தெரசா | 1,900 |
| 8. | மிட்ஸ் மேரி | 2,000 |
| 9. | மிட்ஸ் அருளப்பர் | 1,600 |
| 10. | மிட்ஸ் செபாஸ்டின் | 1,100 |
| 11. | மிட்ஸ் பெரியநாயகி | 1,100 |
| 12. | மிட்ஸ் லூசியா | 1,000 |
| 13. | மிட்ஸ் கலியாணமாதா | 600 |
| 14. | யகோவா | 850 |
| 15. | மிட்ஸ் குழந்தை யேசு | 750 |
| 16. | மிட்ஸ் கார்மல் | 1,050 |
| 17. | நாயகி | 1,200 |
| | **மொத்தம்** | **20,850** |
| **குழித்துறை** | | |
| 1. | மிட்ஸ் காஞ்சிரம் விளை | 1,000 |
| 2. | மிட்ஸ் வலியவிளை III | 2,000 |
| 3. | கோலகாட்டுவிளை | 2,386 |
| 4. | வள்ளிக்கோடு | 1,700 |
| 5. | மிட்ஸ் கோல்டன் | 500 |
| 6. | மிட்ஸ் அருவி | 2,550 |
| 7. | தெற்றிவிளை | 1,000 |
| 8. | மிட்ஸ் குழந்தை யேசு | 920 |
| 9. | சகாயமாதா | 1,000 |
| 10. | சென்அன்றணி | 1,650 |
| 11. | மிட்ஸ் வாணியான்விளை II | 1,000 |
| 12. | சென்சூசையப்பர் | 2,000 |
| 13. | சூசைபுரம் | 1,800 |
| 14. | விடியல் | 2,100 |

வெண்டைக்காயை நறுக்கி, இரவில் படுக்கும் போது நீரில் ஊற வைத்து காலையில் குடித்தால், இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்தலாம்.

| | | |
|---|---|---|
| 15. | ஜீவஒளி | 2,000 |
| 16. | தேவிநகர் | 2,000 |
| 17. | கோட்டவிளை II | 1,560 |
| 18. | வலியவிளை I | 2,000 |
| 19. | கோட்டவிளை I | 4,851 |
| 20. | மேரிகோல்டு | 1,000 |
| 21. | மிட்ஸ் நெல்வேலி அக்கிரி II | 650 |
| 22. | பறக்காணிவிளை | 1,050 |
| 23. | தாமரை | 1,000 |
| 24. | அரியூர்கோணம் | 1,000 |
| 25. | இடைக்காட்டுவிளை | 400 |
| 26. | வரவிளை | 2,450 |
| 27. | தெற்றவிளை | 3,000 |
| 28. | கண்ணக்கோடு | 1,000 |
| 29. | மிட்ஸ் நுள்ளி | 1,000 |
| 30. | மிட்ஸ் றாவிளை | 1,000 |
| 31. | தென்றல் | 1,000 |
| 32. | நெல்வேலி அக்ரி | 1,000 |
| 33. | சூசைபுரம் பகுதி | 2,100 |
| | **மொத்தம்** | **51,667** |

### சூரியகோடு

| | | |
|---|---|---|
| 1. | ஆலுவிளை | 750 |
| 2. | உதயபுரம் | 900 |
| 3. | வண்டங்கனாவிளை | 1,250 |
| 4. | பாருத்தறை | 1,000 |
| 5. | குந்நம்விளாகம் | 650 |
| 6. | காஞ்சிரவிளாகம் | 1,005 |
| 7. | குறிச்சிவிளை | 1,220 |
| 8. | பெருமான்விளை | 900 |
| 9. | குழிஞ்ஞான்விளை | 1,000 |
| 10. | கண்டச்சான்விளை | 1,000 |
| 11. | மிட்ஸ் கிறிஸ்துஅரசர் | 750 |
| 12. | மரியகிரி | 2,380 |
| 13. | பாத்திமாநகர் | 1,500 |
| 14. | பொன்னறவிளை | 900 |
| 15. | வயலங்கரை | 850 |
| 16. | மண்விளை | 1,100 |
| 17. | கல்லுவிளை | 1,050 |
| 18. | மிட்ஸ் அன்னை | 1,000 |
| 19. | மிட்ஸ் வரிக்கேனிவிளை | 1,050 |
| 20. | ஒட்டுவிளை | 1,000 |
| | **மொத்தம்** | **21,255** |

### பாலவிளை

| | | |
|---|---|---|
| 1. | கிழக்கேபொற்றை | 2,000 |
| 2. | மிட்ஸ் பாலவிளை II | 3,400 |
| 3. | பாலவிளை I | 600 |
| 4. | மிட்ஸ் புஷ்பகிரி II | 1,085 |
| 5. | மிட்ஸ் ஆனப்பாறை | 1,005 |
| 6. | புல்லுவிளை | 720 |
| 7. | மங்குழி II | 550 |
| 8. | மிட்ஸ் கோவில்தட்டு | 1,425 |
| 9. | மிட்ஸ் பேரகத்துவிளை | 1,220 |
| 10. | முதுகுடி | 1,510 |
| 11. | மிட்ஸ் அடைக்காக்குழி | 700 |
| 12. | மிட்ஸ் நெடியவிளை | 2,000 |
| 13. | முறியவிளாகம் | 1,250 |
| 14. | ஈந்திக்கால விளை | 1,940 |
| 15. | மிட்ஸ் பனங்கூட்டம் | 750 |
| 16. | போராங்கோடு | 1,030 |
| 17. | மாவறத்தலை | 1,000 |
| 18. | காட்டுக்கடை | 900 |
| 19. | மிட்ஸ் பின்குளம் | 3,000 |
| 20. | மிட்ஸ் செறுக்குழி | 1,600 |
| 21. | மிட்ஸ் பாத்திமாபுரம் | 1,100 |
| 22. | உபரித்தலை | 2,770 |
| 23. | ஊரம்புவிளை II | 1,150 |
| 24. | பரணிமாவிளை | 2,000 |
| 25. | பல்லுக்குழி | 600 |
| 26. | புஷ்பகிரி | 900 |
| 27. | மிட்ஸ் இடைக்காடு | 525 |
| 28. | மிட்ஸ் மணலி | 710 |
| 29. | மிட்ஸ் சூழால் | 1,000 |
| 30. | மிட்ஸ் அன்னைநகர் | 1,015 |
| | **மொத்தம்** | **39,455** |

### செல்லங்கோணம்

| | | |
|---|---|---|
| 1. | சகாயநகர் | 7,500 |
| 2. | மிட்ஸ் புதுகாடுவெட்டி | 4,220 |
| 3. | மடத்துவிளை | 3,500 |
| 4. | தாணிக்கோட்டவிளை | 1,130 |
| 5. | அன்னை வேளாங்கன்னி | 1,865 |
| 6. | காட்டுவிளை IV | 1,980 |
| 7. | மிட்ஸ் ஒயிட் றோஸ் | 1,500 |
| 8. | மிட்ஸ் ஸ்டார் | 2,050 |
| 9. | மிட்ஸ் அன்னை | 1,040 |
| 10. | லில்லிபிளவர் | 3,030 |
| 11. | மிட்ஸ் மல்லி | 800 |
| 12. | வாளோடு I | 1,100 |
| 13. | வாளோடு II | 700 |
| 14. | வாளோடு III | 500 |
| 15. | வாளோடு IV | 692 |
| 16. | காட்டுவிளை I | 1,000 |
| 17. | கோனத்துவிளை II | 550 |
| 18. | மிட்ஸ் கஞ்சிக்குழி | 200 |
| | **மொத்தம்** | **33,357** |

### கிராத்தூர்

| | | |
|---|---|---|
| 1. | மிட்ஸ் மஞ்சத்தோப்பு காலணி IV | 1,000 |
| 2. | அடச்சுவிளாகம் | 950 |
| 3. | மிட்ஸ் மஞ்சத்தோப்பு IV | 950 |
| 4. | பிலாங்காலை | 1,000 |
| 5. | மிட்ஸ் கல்லுபொற்றை | 800 |
| 6. | வெள்ளங்கெட்டி | 650 |
| 7. | தட்டான்விளை | 800 |
| 8. | மிட்ஸ் ரெத்தினபுரம் | 500 |
| 9. | பண்டாரக்காடு | 1,000 |
| 10. | பன்னீட்டுவிளை II | 1,000 |
| 11. | குருத்தோலைக்கட்டி I | 700 |
| 12. | குருத்தோலைக்கட்டி II | 1,650 |
| 13. | துண்டுவிளை | 700 |
| 14. | ஆழங்கால்விளை | 1,000 |
| 15. | காரவிளை | 1,710 |
| 16. | மாவுநிந்நவிளை | 1,210 |
| 17. | மஞ்சத்தோப்பு III | 900 |

| | | |
|---|---|---|
| 18. | மிட்ஸ் குன்னிச்சான்விளை | 1,000 |
| 19. | கைவாணிவிளை | 1,000 |
| 20. | அஞ்சாலி | 1,550 |
| 21. | மருதங்காவிளை | 1,000 |
| 22. | தானிநிந்நவிளை | 1,200 |
| 23. | மிட்ஸ் தெருவிளாகம் | 1,000 |
| 24. | மிட்ஸ் மேலவிளை | 1,000 |
| 25. | டோமினிக் சேவியோ | 1,150 |
| 26. | தேரிவிளை | 850 |
| 27. | மஞ்சத்தோப்பு II | 450 |
| 28. | வடக்கே விறகுவெட்டிவிளை | 1,050 |
| | **மொத்தம்** | **27,770** |

## Common Collection

| | | |
|---|---|---|
| 1. | திருமதி. புஷ்பலதா (புஷ்பகிரி) | 3,450 |
| 2. | திருமதி. ஷீபா (கோயிக்கதோப்பு) | 1,320 |
| 3. | திருமதி. ஜீவா (செல்லங்கோணம்) | 2,000 |
| 4. | திருமதி. கிறிஸ்டல் ஜெபா | 730 |
| 5. | MSW Students | 3,000 |
| 6. | திரு. ஜோசப் பேட்ரிக் ஆன்றணி | 1,341 |
| 7. | Sr. அகதா (ஆற்றூர்) | 1,250 |
| 8. | கொட்டாரம் பகுதி | 2,530 |
| 9. | திருமதி. றீத்தாம்மா (சின்னத்துறை) | 9,286 |
| 10. | திருமதி. சஜிதா (சூரியகோடு) | 2,123 |
| 11. | திருமதி. சிறிய புஷ்பராணி (ஆளூர்) | 2,500 |
| 12. | திருமதி. லவ்லி (மரியகிரி) | 3,750 |
| 13. | செல்வி. திவ்வியா (ஆதிச்சவிளாகம் - தளிர்கள்) | 551 |
| 14. | திருமதி. ஷைனி - கிராத்தூர் | 3,176 |
| 15. | திருமதி. சுனிதா (சாரூர் SAFP II) | 2,000 |
| 16. | Malankara School of Commerce - Mariagiri | 5,005 |
| | **மொத்தம்** | **44,012** |

## அகஸ்தீஸ்வரம்

| | | |
|---|---|---|
| 1. | மிட்ஸ் டைமண்ட் | 1,000 |
| 2. | மிட்ஸ் தென்றல் | 1,200 |
| 3. | மிட்ஸ் வெண்ணிலா | 1,000 |
| 4. | மிட்ஸ் சக்தி | 500 |
| 5. | மிட்ஸ் டாலியா | 1,600 |
| 6. | மிட்ஸ் விவேகானந்தர் | 900 |
| 7. | ஸ்ரீசக்தி | 1,000 |
| | **மொத்தம்** | **7,200** |

## மந்தாரம்புதூர்

| | | |
|---|---|---|
| 1. | கோவா சுயஉதவிக்குழு | 600 |

## ஆதிச்சவிளாகம்

| | | |
|---|---|---|
| 1. | மிட்ஸ் லபோனா | 1,000 |
| 2. | மிட்ஸ் கண்ணன்விளை | 1,000 |
| 3. | மிட்ஸ் வாறுதட்டு | 1,000 |
| 4. | மிட்ஸ் வலியவிளை | 1,500 |
| 5. | மிட்ஸ் விண்ணூர் பழஞ்சி | 2,000 |
| 6. | மிட்ஸ் காணவிளை | 2,008 |
| 7. | மிட்ஸ் மங்கலத்துவிளை | 620 |
| 8. | மிட்ஸ் கோல்டு | 1,550 |
| 9. | மிட்ஸ் கைத்தறவிளை | 1,400 |
| 10. | வலியவிளாகம் சுயஉதவிக்குழு | 3,380 |
| 11. | புலையன்விளை | 3,000 |
| 12. | மிட்ஸ் குட்டித்தறை | 1,470 |
| | **மொத்தம்** | **19,928** |

## பனிச்சமுடு


| | | |
|---|---|---|
| 1. | மிட்ஸ் கீழ்மாங்கோடு | 800 |
| 2. | கீழ்மாங்கோடு | 1,700 |
| 3. | குளவிளை | 1,000 |
| 4. | மிட்ஸ் கானத்துகோணம் | 500 |
| 5. | குதிரவட்டம்காலை | 950 |
| 6. | மிட்ஸ் ஓடல்விளை | 1,800 |
| 7. | மிட்ஸ் கரைக்காட்டுவிளை | 1,700 |
| 8. | மிட்ஸ் இடைவிளாகம் | 1,500 |
| 9. | மிட்ஸ் மாங்கோடு | 1,150 |
| 10. | எள்ளுவிளை | 2,000 |
| 11. | மிட்ஸ் பள்ளிவிளை | 1,000 |
| 12. | மிட்ஸ் மரியன் | 900 |
| 13. | மிட்ஸ் கமுகின்காடு | 1,500 |
| 14. | மிட்ஸ் பெத்லகேம் | 500 |
| 15. | மிட்ஸ் குளப்பாறை | 500 |
| 16. | மிட்ஸ் மார்ஸ்லீபா | 1,600 |
| 17. | மிட்ஸ் காஞ்சியோடு | 1,000 |
| 18. | மிட்ஸ் பறவிளாகம் | 1,000 |
| 19. | பாகோடு | 1,450 |
| 20. | வலியவிளை | 500 |
| 21. | ஆயிக்கோணம் | 1,550 |
| 22. | வளர்மதி | 2,000 |
| 23. | கைதச்சாணி | 1,900 |
| 24. | மிட்ஸ் அம்பலகாலை | 1,600 |
| | **மொத்தம்** | **30,100** |

## தச்சூர்கோணம்

| | | |
|---|---|---|
| 1. | முகவூர் | 1,000 |
| 2. | தட்டன்விளாகம் | 2,000 |
| 3. | செண்ட் ஜார்ஜ்நகர் | 500 |
| 4. | ஸ்டார் ஐவறத்தோட்டம் | 1,000 |
| 5. | மிட்ஸ் ஐவறத்தோட்டம் | 1,150 |
| 6. | மிட்ஸ் காவூர்கோணம் | 530 |
| 7. | தச்சூர்கோணம் | 1,000 |
| 8. | மிட்ஸ் வட்டவிளை | 1,600 |
| 9. | மிட்ஸ் சென்மேரிஸ் | 250 |
| 10. | குஞ்சால்விளை | 500 |
| 11. | மிட்ஸ் பந்தல்விளை | 700 |
| 12. | மிட்ஸ் தட்டான்கண்டம் | 600 |
| 13. | மிட்ஸ் ஜார்ஜ் நாகர் | 2,000 |
| 14. | மிட்ஸ் சென்தோமஸ் | 640 |
| 15. | மிட்ஸ் சாண்டிப்பாறை | 500 |
| 16. | மிட்ஸ் அபினயா | 1,000 |
| 17. | மிட்ஸ் நிலா | 600 |
| 18. | மிட்ஸ் தச்சூர்கோணம் | 615 |
| 19. | மிட்ஸ் ஸ்னேகா சிவலோகம் | 1,000 |
| 20. | மிட்ஸ் கண்ணையர் | 500 |
| 21. | மானாங்காணி | 1,000 |
| 22. | மிட்ஸ் நெடுங்குளம் | 350 |
| 23. | மிட்ஸ் சேம்பிறாவிளை | 500 |
| | **மொத்தம்** | **19,535** |

- தொடரும்

# நாம விழா நல்வாழ்த்துகள்



எங்கள் பாசமிகு மிட்ஸ் நிறுவனத்தின் தலைவர்
மேதகு ஆயர் Dr. வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை
அவர்களது நாம விழாவில் கடவுளின் அனைத்து
நல்வரங்களும் நிறைவாக கிடைத்திட மிட்ஸ் குடும்பம்
சார்பாக வாழ்த்துகிறோம் ! ! !

# குறுக்கெழுத்துப்போட்டி

**உங்கள் மூளைக்கு ஒரு சவால்**

**மேலிருந்து கீழ்**

1. குருசு என்பதன் பொருள் (3)
2. கேளா ஒலியை உணரும் தன்மை யாருக்கு உள்ளது? (3)
3. 'கடல் புகை" சாதாரணமாக காணப்படும் பகுதி (4)
12. பொருள் மற்றும் சேவை வரி (GST) என்பது எந்நாட்டில் தோன்றியது (3)
14. மையத்தில் மெலிந்தும், ஓரங்களில் தடித்தும் காணப்படும் லென்சு (2)
15. தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் (NREGA) வேலை உத்திரவாதம் அளிக்கும் நாட்களின் எண்ணிக்கை (3)
17. தென்னிந்தியாவின் அணிகலன்? (4)
18. முதன் முதலாகத் தயாரிக்கப்பட்ட பர்ஸனல் கம்யூட்டரின் பெயர் என்ன? (4)

**வலமிருந்து இடம்**

4. உலகில் மிக அதிகமாக பேசப்படும் மொழி எது? (4)
7. இமய மலையின் வடிவம்? (2)
9. கடம் - இச்சொல்லின் பொருள் (4)
19. 1936-ஆம் ஆண்டு மொழி அடிப்படையில் பிரிக்கப்பட்ட முதல் மாநிலம் எது? (3)
27. தேனீக்கள் எவ்வாறு அழைக்கப் படுகின்றன? (9)

**கீழிருந்து மேல்**

5. இசைக்கு முக்கிய ஆதாரமாகக் கருதப்படும் வேதம் எது? (2)
8. எந்த உலோகத்தின் உப்புக்கள் சூரிய ஒளியால் பாதிக்கப் படுகின்றன? (3)
10. தமிழ்நாட்டின் பேரிடர் அவசர கால தொலைபேசி எண் எது? (4)
11. மண்புழுவின் சுவாச உறுப்பு (2)
13. 26 முதல் 32 வயது வரை உடைய பருவ மகளிர் _______ (3)
20. மிக அதிகமாக கிடைக்கக் கூடிய ஆற்றல் வளம் எது? (4)
23. பெண்கள் உரிமைபெற்றுப் புதுஉலகைப் படைக்க வேண்டும் என்று விரும்பியவர் யார்? (4)
24. தமிழ் நாட்டில் எந்த மாவட்டத்தில் உணவு தானியங்கள் அதிகமாக உற்பத்தியாகிறது? (5)
26. அடைமொழியில் குறிக்கப்பெறும் நூல் எது? (5)

**இடமிருந்து வலம்**

6. உலகிலேயே முதன் முதலில் ஹைட்ரஜன் பலூனைத் தயாரித்தவர் யார்? (4)
11. "சரக்கு வண்டி விவசாயம்" என அழைக்கப்படுவது எது? (6)
12. ஆந்திரா, ஹரியானா மற்றும் பஞ்சாபின் மாநில விலங்கு எது? (4)
14. ________ பெட்டியில் குளோரோஃபுளுரோ கார்பன் பயன்படுத்தப்படுகிறது? (7)
16. 10 விவசாயிகள் 21 நாட்களில் ஒரு நிலத்தை உழுது முடிக்கின்றனர். எனில் அதே நிலத்தை 14 விவசாயிகள் எத்தனை நாட்களில் உழுது முடிப்பர்? (2)
21. சாகும் வரை வளர்ந்து கொண்டே இருக்கும் உயிரினம் எது? (2)
22. 'பெட் நிலம்' என்று அழைக்கப்படுவது _____ சமவெளி (3)
24. இந்தியாவிலேயே அதிக அளவு காற்றாலை களைக் கொண்டுள்ள மாநிலமாக எந்த மாநிலம் விளங்குகிறது? (5)
25. இந்திய நியூட்ரினோ ஆய்வுக்கூடம் தமிழகத்தின் எந்த மாவட்டத்தில் உள்ளது? (2)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | 3 | | | | 4 |
| | | | 5 | | | 6 | | | |
| | | | 7 | 8 | | | | | 9 |
| | 10 | 11 | | | | 12 | | | |
| 13 | 14 | | | | | | | 15 | |
| | | | | 16 | | | 17 | | |
| | 18 | | | | 19 | ■ | | | 20 |
| | | | | ■ | 21 | | 22 | | |
| | | 23 | 24 | | | | | 25 | |
| 26 | | | | | | | | | 27 |

நாம் செய்யும் காரியம் அனைத்துமே சுலபமாக அமைவது இல்லை ஆனால் இடைவிடா முயற்சியோடு நீ செய்யும் போது அது சாத்தியமாகிறது.


குறிப்பு : சரியான பதில் எழுதும் நபருக்கு குலுக்கல் முறையில் தேர்வு செய்து தக்க பரிசு வழங்கப்படும். விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 2024 ஆகஸ்ட் 13. அதற்கு பின்வரும் விடைகள் நிராகரிக்கப்படும். புத்தகத்தின் இந்த பக்கத்தில் விடைகளை எழுதி கத்தரித்து தபாலில் அல்லது அமைப்பாளர் வழியாக அனுப்பவும். நகல் அனுப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

முகவரி: ஆசிரியர், ஐக்கியசுடர், மிட்ஸ் அலுவலகம், இடைவிளாகம், கழுவன்திட்டை, குழித்துறை அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் - 629163, தமிழ்நாடு.

கடந்த மாத குறுக்கெழுத்து போட்டியில்
வெற்றி பெற்றவர்

திருமதி. P. மேழ்சி, சாத்தன்கோடு
சுயஉதவிக்குழு, நடைக்காவு கிளஸ்டர்,
களியக்காவிளை மண்டலம்

போட்டியில் ஆர்வத்துடன் பங்கு பெற்ற அனைத்து சுய உதவி குழு உறுப்பினர்களுக்கும் மிட்ஸ் நிறுவனத்தின் சார்பில் வாழ்த்துக்கள். தொடர்ந்து உங்கள் ஆதரவினை வேண்டுகிறோம்.




## வாசகர் கவனத்திற்கு

மிட்ஸ் ஐக்கிய சுடர் இதழில் தங்களின் படைப்புகளை வரவேற்கப்படுகின்றன. மேலும் இவ்விதழில் தங்களின் விளம்பரங்கள் வெளியிட விரும்பினால் அதற்கான விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

### விளம்பரம்

**இதழின் கடைசி பக்கம்**
முழு பக்கத்திற்கு கட்டணம் (கலர்) Rs.2500
அரை பக்கத்திற்கு கட்டணம் (கலர்) Rs.1250

**இதழின் முதல் பக்கத்தின் உள்பகுதிக்கு**
முழு பக்கத்திற்கு கட்டணம் (கலர்) Rs.2000

**இதழின் கடைசி பக்கத்தின் உள் பக்கம்**
அரை பக்கத்திற்கு கட்டணம் (கலர்) Rs.750
முழு பக்கத்திற்கு கட்டணம் (கலர்) Rs.1500

**பிறந்தநாள் மற்றும் திருமண வாழ்த்துக்கள்**
கால் பக்கம் கட்டணம் Rs.250 அரை பக்கத்திற்கு கட்டணம் Rs.500
முழு பக்கத்திற்கு கட்டணம் Rs.1000

விளம்பரங்கள் வெளியிட விரும்புவர்கள் மிட்ஸ் அலுவலகத்தை அணுகுமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் தங்களின் சொந்த படைப்புகள் மற்றும் விமர்சனங்களை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**மிட்ஸ் அலுவலகம்**
இடைவிளாகம் - கழுவன்திட்டை, குழித்துறை அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் - 629 163
Email:midsmarthandam@gmail.com Website:mids.org.in
Ph : 263390, 29569

# தளிர்கள் உலகை திட்ட விடுமுறைகால பயிற்சி வகுப்புகள்



விடுமுறைகால பயிற்சி வகுப்பு துவக்கவிழா
குருகுல முதல்வர் Rev. Msgr. Jose Bright



காய்கறி தோட்டம் அமைத்தல்



அருட்தந்தை. அபிஷேக் படிப்பது
குறித்த வகுப்பு



நாட்டுப்புற விளையாட்டு



யோகா பயிற்சி



விடுமுறைகால பயிற்சிக்கு
கலந்துகொண்டவர்கள்





Cell : 91509 71566

உரிமையாளர்

**K. JAYAKUMAR**

**HOTEL THAMBURAN**

**சுவையாக தாய் பாசத்துடன்**
**உணவு அளிக்கும் உணவகம்**


Prop.: G. Sreekumar
94423 75501
94892 82751
Phone : 04651-204151
ESKEY
SAGAR
SEWING MACHINE COMPANY
Bus-stand, Kuzhithurai, K.K. District - 629 163
43 YEARS OF EXCELLENCE
Sales, Service & Exchange of : Domestic, Industrial, Embroidery Machines
• SAGAR • MASTER • JUKI • SINGER • MERRIT
• MODI • ESKEY • USHA • Ranew • Rama
Dealers for
JUKI
ZOJE
SAGAR
JACK
JUKI


04651 - 206075
94424 01665
MB
Merlin Backery
ICE CREAM & MILK BAR
NADAIKKAVU JUNCTION, CHATHENCODE POST,
PIN : 629153, K.K. DIST.
Prop. : T. Selvan